தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 2 பிப்ரவரி – 2017 ₹1.00

## குடியரசு தின விழா– 2017



நமது நாட்டின் 68ஆவது குடியரசு தின விழா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமை நிலையத்தில் 26.01.2017அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றிவைத்துக் குடியரசு தின உரை நிகழ்த்தினார். மேலும், சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகத்தின் 'சி' மற்றும் 'டி' பிரிவுப் பணியாளர்களைச் சிறப்பு செய்யும் வகையில் அவர்களுக்குச் சிறந்த பணியாளர் விருது வழங்கினார். முன்னதாக, துணைவேந்தர் அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். நாமக்கல், ஒரத்தநாடு, திருநெல்வேலி, கோடுவெளி மற்றும் ஒசூரில் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரிகளின் முதல்வர்கள் தத்தம் கல்லூரி வளாகங்களில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். கல்லூரிப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் குடியரசு தின விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.



குடியரசு தின விழாவை முன்னிட்டு மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் 26.01.2017அன்று மரக் கன்று நடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. புதுதில்லி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் துணை வனப் பாதுகாவலர் டாக்டர் கே. கணேஷ்குமார் இ.வ.ப., கூடுதல் வேளாண் இயக்குநர் திருமதி எஸ். செந்தாமரை இ.ஆ.ப., பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்று, மரக்கன்றுகள் நட்டனர். மேலும், தீவன மர நாற்றுப் பண்ணையைக் கூடுதல் வேளாண் இயக்குநர் திருமதி எஸ். செந்தாமரை இ.ஆ.ப. அவர்கள் திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் 100 தீவன மரக் கன்றுகள் நடப்பட்டன.

## பொங்கல் விழா–2017



**பல்கலைக்கழகத் தலைமை நிலையம்:** மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகமும் கால்நடை நலக் கல்வி மையத்தின் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளமும் இணைந்து மாதவரம், பல்கலைக்கழக மைய ஆய்வகத்தில் 20.01.2017அன்று கண்காட்சிக்கு ஏற்பாடு செய்து, பொங்கல் விழாவைக் கொண்டாடின. தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் இயக்குநர் திரு. த. ஆப்ரகாம் இ.ஆ.ப., அவர்கள் விழாவைத் துவக்கிவைத்து, ஏழு புதிய தொழில்நுட்பங்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். மேலும், பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம் உருவாக்கிய "பயிற்சிக் கால அட்டவணை" மற்றும் "கால்நடைகளுக்கான தீவன அட்டவணை" குறித்த தனுவாஸ் செல்பேசி செயலிகள் (மொபைல் ஆப்ஸ்) வெளியிடப்பட்டன. 15,000க்கும் மேற்பட்ட பண்ணையாளர்களுக்கு இலவச குறுஞ்செய்தி அனுப்பப்பட்டன. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் உழவர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** பொங்கல் விழா, பல்கலைக்கழகத்தால் தத்தெடுக்கப்பட்ட காரைக்குறிச்சி கிராமத்தில் 11.01.2017 அன்று நடைபெற்றது. விழாவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் மாணவர்கள், கிராம ஆடவர் மற்றும் மகளிர் ஆர்வமுடன் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். விழாவில் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவைக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டம் ஒருங்கிணைத்தது. 15.01.2017 அன்று கல்லூரியின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கல்லூரியின் முதல்வர் (பொ.) முனைவர் எம்.ஆர். புருசோத்தமன், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

**திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** பொங்கல் விழா, கல்லூரி விடுதி வளாகத்தில் 11.01.2017 அன்றும், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் 12.01.2017 அன்றும் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். விழாவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

**ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** 12.01.2017 அன்று கொண்டாடப்பட்ட பொங்கல் விழாவில் மாணவர்கள் புதுப்பானையில் பொங்கல் வைத்தனர் மற்றும் தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான உரியடித்தல் விளையாடி மகிழ்ந்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் விழாவில் பங்கேற்றார்.

## நீலநாக்கு நோய்த் தடுப்பு மருந்துத் தொழில்நுட்பப் பரிமாற்றம்



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியிலான "நீலநாக்கு நோய்" குறித்த அனைத்திந்திய இணைப்புத் திட்டத்தின் பல்கலைக்கழக மையம்மூலம் உருவாக்கப்பட்ட பன்முனைச் செயலிழக்கச் செய்யும் நீலநாக்கு நோய்த் தடுப்பு மருந்துத் தொழில்நுட்பம் வணிகமயமாக்கலுக்காக ஐதராபாத், பிரிலியன்ட் பயோ பார்மா தனியார் நிறுவனத்திற்குப் பரிமாற்றம் செய்யப்பட்டது. பல்கலைக்கழகத் தலைமை நிலையத்தில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 24.01.2017 அன்று பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன், இசாட் நகர் இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் இணை இயக்குநர் மற்றும் நீலநாக்கு நோய்க்கான அனைத்திந்திய இணைப்புத் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.கே. குப்தா, பிரிலியன்ட் பயோ பார்மா தனியார் நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் திரு. சி.பி. ராஜு ஆகியோர் இடையே கையெழுத்தாயிற்று. இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் திஜெ. ஹரிகிருஷ்ணன் மற்றும் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஜ. கணேசன் ஆகியோர் உடனிருந்தனர். நீலநாக்கு நோய்க்கான அனைத்திந்திய இணைப்புத் திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பூசிகள் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஒய். கிருஷ்ணமோகன் ரெட்டி, நீலநாக்கு நோய்த் தடுப்பு மருந்தின் தொழில்நுட்ப விளக்கம் அளித்தார். திட்டத்தின் இணை ஆராய்ச்சியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் பி. பிருந்தா, பண்ணைக் கால்நடைகளுக்குத் தடுப்பு மருந்து அளிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கினார்.

## கால்நடை மருந்துக் கட்டுப்பாடு மற்றும் பயன்பாடுசார் பரிமாற்ற ஆய்வு குறித்த பயிலரங்கு



கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளம்மூலம் "இந்தியாவில் கால்நடைத் தடுப்பு மருந்துகளின் நிலை மற்றும் நோய் கண்டறிதல்" குறித்த உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக "கால்நடை மருந்துக் கட்டுப்பாடு மற்றும் பயன்பாடுசார் பரிமாற்ற ஆய்வு" குறித்த பயிலரங்கு 05.01.2017 மற்றும் 06.01.2017 ஆம் நாள்களில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் திரு. எஸ். அப்துல் காதர் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிலரங்கிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். மத்திய அரசின் விலங்கு தனிமைப்படுத்துதல் பிரிவு அலுவலர் டாக்டர் டி.கே. சாஹு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்வேறு தொழில் பிரதிநிதிகளுடன் சென்னை, இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் டாக்டர் குகன் ஜெயராமன், சென்னை, காப்புரிமை உதவிக் கட்டுப்பாட்டாளர் திரு. ஆர். ரஜினி ஆகியோர் விரிவுரை ஆற்றினர். முதுநிலைப் பட்ட மாணவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தொழில்துறை சார்ந்தோர் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் என 40 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## உணவுப் பரிசோதனை ஆய்வகம் – திறப்பு

மத்திய அரசின் உணவுப் பதப்படுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் முழு நிதியுதவியுடன் "இறைச்சிப் பரிசோதனை ஆய்வகங்களை ஏற்படுத்துதல்" என்ற திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ரூபாய் 2.237/– கோடி நிதியில் "இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களுக்கான உணவுப் பரிசோதனை ஆய்வகம்", சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையில் நிறுவப்பட்டுள்ளது. இவ் ஆய்வகத்தை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (வேளாண் பொறியியல்) முனைவர் கே. அழகுசுந்தரம் அவர்கள் 21.01.2017 அன்று திறந்துவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். சென்னைக்

கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். (இறைச்சி அறிவியல்) துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராபின்சன் ஜெ.ஜெ. ஆப்ரகாம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர் முனைவர் வி. அப்பாராவ் அவர்கள் நன்றி கூறினார்.



இப் பரிசோதனை ஆய்வகம் இறைச்சி ஏற்றுமதியாளர்களுக்கு உலக இறைச்சி வர்த்தகத்தின் முறையான தரத்தை மதிப்பீடு செய்வதற்கு உதவும்.

## கல்லூரி மற்றும் விடுதி ஆண்டு விழா



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்லூரி மற்றும் விடுதி ஆண்டு விழா 04.01.2017அன்று கொண்டாடப்பட்டது. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஜி. பாஸ்கரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆண்டு மலரை வெளியிட்டு, பல்வேறு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாத் தலைமையுரை ஆற்றினார். முன்னதாகக் கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கையை வாசித்தார். மாணவர் மன்றத் துணைத்தலைவர் முனைவர் இரா. அண்ணல் வில்லி, வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் விடுதிக் காப்பாளர் முனைவர் பி. சாமுவேல் மாசிலாமணி ரொனால்டு, விடுதி ஆண்டு அறிக்கை அளித்தார். இறுதியாக இறுதியாண்டு மாணவர் எஸ். பிரவீன் நன்றியுரை நல்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் பேராசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## விளையாட்டு விழா

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விளையாட்டு விழா 03.01.2017அன்று நடைபெற்றது. தஞ்சாவூர் வருவாய்க் கோட்டாட்சியர் திரு. சி. சுரேஷ் அவர்கள் விழாவினைத் துவக்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார். தேசியத் துப்பாக்கி சுடுவோர் சங்க உறுப்பினர் திரு. அ.யா. அருளானந்தசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் விழாத் தலைமையுரை ஆற்றினார். முன்னதாக உடற்கல்வி உதவிச் செயலாளர் திருமதி எஸ். எழிலரசி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். உடற்கல்விச் செயலாளர் முனைவர் சி. அருண்குமார் அவர்கள் விளையாட்டு ஆண்டு அறிக்கை அளித்தார். இறுதியாகக் கல்லூரியின் உடற்கல்வி இறுதியாண்டு மாணவர் ப.ரா. புவனேஷ்குமார் நன்றியுரை ஆற்றினார்.

## மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் மாணவர்கள் சந்திப்பு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் சார்பில் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறுதியாண்டு கால்நடை மருத்துவ மாணவர்கள் சந்திப்பு 18.01.2017அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சந்திப்பின் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்று மருந்து உற்பத்தியாளர்கள் அமைத்திருந்த பல்வேறு அரங்குகளைப் பார்வையிட்டு, எக்ஸ்–செப்ட் மற்றும் எம்–செப்ட் விருதுகளை மாணவர்களுக்கு வழங்கிச் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சந்திப்பில் மொத்தம் 17 மருந்து உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு தத்தம் மருந்துப் பொருட்களைக் காட்சிக்கு வைத்தும் அவற்றின் பயன்கள் குறித்தும் விரிவாக விளக்கினர். கல்லூரியின் மூன்றாம், நான்காம் மற்றும் இறுதியாண்டு மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். முன்னதாகத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. இராஜா, அனைவரையும் வரவேற்றார். நிறைவாக இறுதியாண்டு மாணவர்கள் சார்பில் செல்வன் ஜெ. மதியழகன் நன்றி கூறினார்.

## திட்டத்தின் துவக்க விழா மற்றும் பயனாளிகளுக்கு இடுபொருட்கள் வழங்கல்

புதுதில்லி, உயிர்த்தொழில்நுட்பத் துறைமூலம் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மைத் துறைக்கு “ஒருங்கிணைந்த பன்றி வளர்ப்பு மூலம்

கொல்லிமலையில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துதல்” என்ற திட்டம், திட்ட மதிப்பீடு ரூபாய் 36.097 இலட்சத்தில் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்



துவக்க விழா நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையின் கிழக்குவளவு கிராமத்தில் 19.01.2017அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் திட்டத்தைத் துவக்கிவைத்து, “பன்றி வளர்ப்பு” கையேடு வெளியிட்டுப் பயனாளிகளுக்கு ஒரு ஆண் மற்றும் மூன்று பெண் பன்றிக்குட்டிகள் மற்றும் இடுபொருட்களை வழங்கி உரையாற்றினார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், நாமக்கல் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் மு. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் வீ. ரமேஷ் திட்டம் குறித்து விளக்கியுரைத்தார்.

## இடுபொருட்கள் வழங்கல்



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம்மூலம் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் ஒருங்கிணைந்த செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், சாஸ்திரம்பாக்கம் கிராமத்தின் செம்மறியாட்டுப் பண்ணையாளர்களுக்கு தனுவாஸ் தாதுப்புக் கலவை, உப்புக் கல், கால்சியம் தீவன உபபொருள் மற்றும் முதலுதவிப் பெட்டி ஆகிய இடுபொருட்கள் 04.01.2017 அன்று வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பங்கேற்று, பண்ணையாளர்களின் பண்ணைகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடி இடுபொருட்கள் வழங்கினார். ஒருங்கிணைந்த செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஹ. கோபி, முனைவர் ஸ்ரீகுமார், பேராசிரியர், தொழில்நுட்ப அலுவலர்கள் உடன் இருந்தனர். மொத்தம் 11 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## தொழில்முனைவோர் பயிற்சியின் இலாபத்தொகை வழங்கல்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் 2015–16ஆம் ஆண்டில் ஜப்பானியக்



காடை, வெண்பன்றி மற்றும் வெள்ளாடு வளர்ப்பு குறித்த தொழில்முனைவோர் பயிற்சியின்கீழ் மாணவர்கள் ஈட்டிய இலாபத்தொகை 04.01.2017அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வழங்கப்பட்டது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் ஜப்பானியக் காடை வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்புமூலம் ஈட்டிய சராசரித் தொகை முறையே ரூ. 2,237, ரூ. 3,268, ரூ.2,233 ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார், ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி. ஜெ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி



பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட “கோழிகளுக்கான தடுப்பூசி அளிப்பவர்” என்ற செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி, ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் 10.01.2017அன்று நடைபெற்றது. பயிற்சியை முடித்த 32 பேருக்குச் சான்றிதழ் மற்றும் உதவித்தொகையை அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார், தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினர். மேலும், வணிக முறையிலான கோழிப் பண்ணைகளில் கோழிகளுக்கான தடுப்பூசி அளிப்பவர் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து விளக்கினர். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் கே. மணி மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### பயிற்சி

- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையமும் அலமாதி, மண்டலத் தீவன விதை உற்பத்தி மையமும் இணைந்து “கால்நடைகளுக்கான பசுந்தீவன உற்பத்தி” குறித்த பயிற்சியினை 11.01.2017 அன்று நடத்தியது. மண்டலத் தீவன விதை உற்பத்தி மைய இயக்குநர் திரு. யாதவ் அவர்கள் பயிற்சியினைத் துவக்கி வைத்தார். பயிற்சியில் பங்கேற்ற பண்ணையாளர்களுக்கு முயல் மசால் விதைகள் வழங்கப்பட்டன. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 33 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் பயிற்சிமூலம் பயன் அடைந்தனர்.
- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், “கறவை மாடு வளர்ப்பு” பயிற்சியைப் பாலக்கோடு மற்றும் சிக்கு மாரண்டஹள்ளியில் முறையே 23.01.2017 மற்றும் 24.01.2017ஆம் நாள்களில் நடத்தியது. தருமபுரி, புதுவாழ்வுத் திட்டத்தின் 109 பயனாளிகள் பயன்பெற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தஞ்சாவூர், நபார்டு வங்கி நிதி உதவியுடன் பசுந்தீவனச் சாகுபடித் தொழில்நுட்பப் பயிற்சி 10.01.2017, 11.01.2017 ஆகிய இரு நாள்கள் நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 32 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.
- இராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், நபார்டு வங்கி ஆகியவை இணைந்து “அறிவியல் முறையில் இலாபகரமான ஆடு வளர்ப்பு” பயிற்சியை 10.01.2017 முதல் 12.01.2017வரை நடத்தின. விருதுநகர், நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. ஜெ. சுப்பிரமணியன் அவர்கள் பயிற்சியில் பங்கேற்று உரையாற்றினார். மொத்தம் 30 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

### புத்தாக்கப் பயிற்சி



பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்காக “அலுவலக நிர்வாகம் மற்றும் கணக்கிடுதல் நடைமுறைகள்” குறித்த புத்தாக்கப் பயிற்சி 03.01.2017 முதல் 05.01.2017 வரை ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் பயிற்சியினைத் துவக்கி வைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் “சிறந்த நிர்வாகம்” குறித்துக் கருத்துரை வழங்கினார். பயிற்சியின் நிறைவு விழாவில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில் மொத்தம் 24 நிர்வாகப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### வெறிநோய்த் தடுப்பூசி முகாம்



பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகத்தின் சிகிச்சைத் துறை வருடாந்திர வெறிநோய்த் தடுப்பூசி அளித்தல் முகாமைச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.01.2017அன்று நடத்தியது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தமது உரையில் வெறிநோய்க்கான தடுப்பு நடவடிக்கையின் தேவை குறித்து வலியுறுத்தினார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சிசிலியா ஜோசப், முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்தார். மொத்தம் 264 நாய்கள் மற்றும் 20 பூனைகளுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### கால்நடை நல முகாம்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் கால்நடை நல முகாம், திருநெல்வேலி மாவட்டம், காடன்குளம் கிராமத்தில் 31.01.2017அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத்தலைமையுரை ஆற்றினார். திருநெல்வேலி, சீனிவாசா சேவை அறக்கட்டளையின் கள இயக்குநர் திரு. இ. முருகன், சிந்தாமணி பஞ்சாயத்து முன்னாள் தலைவர் திரு. ராமசுப்பு ஆகியோர் உரையாற்றினர். மொத்தம் 1566 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், பல்கலைக்கழகம் தத்தெடுத்த கிராமங்களான களக்குடி மற்றும் துலுக்கர்குளத்தில் மலட்டுத்தன்மை நீக்கம் மற்றும் வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து அளித்தல் முகாம் 20.01.2017அன்று நடைபெற்றது. மொத்தம் 489 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது மற்றும் 166 நாட்டுக்கோழிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கற்பிக்கும் கால்நடைச் சிகிச்சை வளாகமும், கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும்

ஒருங்கிணைந்து 31.01.2017 அன்று திருக்கானூர்பட்டியில் கால்நடை நல முகாமினை நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் பயனாளிகளுக்கு தாதுப்புக் கலவையை வழங்கி முகாமினைத் துவக்கிவைத்தார்.

- இராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் பல்கலைக்கழகம் தத்தெடுத்த கிராமமான தெற்கு வெங்கநல்லூரியில் கால்நடை நல முகாமை 25.01.2017 அன்று நடத்தியது. முகாமில் தனுவாஸ் தாதுப்புக் கலவை வழங்கப்பட்டது மற்றும் சிறந்த கிடேரிக் கன்றுகளின் உரிமையாளர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. தனசீலன், உதவிப் பேராசிரியர் மருத்துவர் ஜி. சீனிவாசன் ஆகியோர் முகாமை ஒருங்கிணைத்தனர்.

### முதல் பர்கூர் கன்று பிறப்பு

பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தில் பிறப்பு எடை 15 கிலோவுடன் கூடிய காளைக் கன்று 14.01.2017 அன்று பிறந்தது.

### பர்கூர் காளைகளுக்குப் பரிசு

பொள்ளாச்சியில் 04.02.2017 அன்று நடைபெற்ற நாட்டின மாடுகள் கண்காட்சியில் பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் இரண்டு பர்கூர் காளைகள் நாட்டின மாடுகளில் சிறந்த இனத்திற்கான பரிசுகள் பெற்றன. பண முடிப்பு ரூ. 3000/– மற்றும் கேடயம் அளிக்கப்பட்டன. கண்காட்சியில் மொத்தம் 1000 கால்நடைகள் பங்கேற்றன.

### புதிய அலுவலகக் கட்டடம்



மாதவரம், கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 47.84 இலட்ச மதிப்பில் புதிய அலுவலகக் கட்டடமும், பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான வெப்ப ஆய்வு அறையும் நிறுவப்பட்டுள்ளன. இப் புதிய வசதிகளைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 20.01.2017 அன்று திறந்துவைத்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### கணினி வலையமைப்பு மற்றும் தகவல் தொகுப்புச் சேவை மையம் துவக்கம்

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் மாதவரம் பால்பண்ணையில் உள்ள பல்கலைக்கழகத் தலைமை நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள கணினி வலையமைப்பு மற்றும் தகவல் தொகுப்புச் சேவை மையத்தை 11.01.2017 அன்று துவக்கிவைத்தார். துவக்க விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழகப் பணியாளர்கள் பங்கேற்றனர். இந்தச் சேவை மையத்தில் பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் கணினிமயமாக்கல் பொருட்டுக் கணினித் துறைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், மின் ஆளுகைக்காகப் பல்கலைக்கழகத்தின் முழுமையான கல்விசார் வளங்களைத் திட்டமிட்டு உருவாக்கலும் இம் மையத்தின் குறிக்கோளாகும். பணியாளர் தகவல் முறை, மாணவர் மேலாண் முறை மற்றும் நிதி நிர்வாக முறை ஆகியவை வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். பல்கலைக்கழகம் முழுமைக்குமான



வருமான வரி தொடர்பானவற்றை இம் மையம் கவனிக்கும் மற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து வகையான மென்பொருள் மற்றும் வன்பொருள் செயலாக்கங்களைப் பொதுமைப்படுத்தும். பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் இம்மையத்தின் ஒருங்கிணை அதிகாரி ஆவார்.

### புதிய பிரிவுகள் திறப்பு




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் “நவீனப் பன்றி இனவிருத்திப் பண்ணை நிறுவுதல்” குறித்த தேசியக் கால்நடை மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் ரூபாய் 9.5 இலட்சத்தில் அலுவலக மற்றும் ஆய்வகக் கட்டடம் நிறுவப்பட்டுள்ளது. இதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 04.01.2017 அன்று திறந்துவைத்தார். மேலும், கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் உள்ள மண்புழு உர உற்பத்திப் பிரிவு, மாணவர்கள் உதவி மையம், மருத்துவ நல மையம், பணியாளர் மற்றும் மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலை ஆகியவற்றையும் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

### மாதிரி வாத்து மற்றும் மீன் வளர்ப்புப் பிரிவு மற்றும் மூலிகைத் தோட்டம் துவக்கம்

0.25 ஏக்கர் நீர்ப்பரப்பில் 120 சதுர அடியில் 100 வாத்துகள் மற்றும் 600 மீன்கள் கொண்ட கூண்டுடன் ஒருங்கிணைந்த வாத்து மற்றும் மீன் வளர்ப்பு மாதிரிப் பிரிவு, 25 வகையான

மூலிகைத் தாவரங்களுடன் 30 சென்டில் மூலிகைத் தோட்டம் ஆகியவை காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவ்வசதிகளைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 20.01.2017அன்று துவக்கிவைத்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் உடனிருந்தார். மேலும், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

## விருது

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் விரிவாக்கக் கல்வித் துறையின் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் (பொ.) முனைவர் கொ. மொ. சக்திவேல் அவர்கள் 28.01.2017 முதல் 31.01.2017 வரை ஹைதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தில் நடைபெற்ற 8ஆவது தேசிய விரிவாக்கக் கல்விக் கருத்தரங்கில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை விருது பெற்றார்.
- மும்பை, அலெம்பிக் மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தின் எக்ஸ்–செப்ட் மற்றும் எம்–செப்ட் விருதுகளை முறையே மருத்துவர் கே. பிரியா (OGPA 8.54) மற்றும் மருத்துவர் வி. வினோதினி (OGPA 8.20) ஆகியோர் பெற்றனர். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 18.01.2017அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் மாணவிகளுக்கு விருதுகளை வழங்கி, அவர்களைப் பாராட்டினார்.
- இந்தியக் கலாச்சாரத் துறை சார்பில் தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தில் 09.01.2017 முதல் 12.01.2017 வரை நடத்தப்பட்ட இளங்கதிர்–2017இல் மாநில அளவிலான தனி நபர் நாடகப் போட்டியில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர் திரு. ர. இராமகிருஷ்ணன் “இளங்கதிர் 2017” விருதினைப் பெற்றார். மேலும், கல்லூரியின் 28 நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்கள் நிகழ்ச்சியின் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் முதன்மையான நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 35ஆவது பாடத்திட்டக் குழுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி | : | 02.01.2017 |
| ஆய்வுத் திட்டங்கள் குறித்த ஆய்வு, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | : | 04.01.2017 |
| துணைவேந்தர் ஆய்வுக் கூட்டம், மதுரை, கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் நோய் கண்டறிதல் ஆய்வு மையம் | : | 19.01.2017 |

## சிபி புட்ஸ் குழு வருகை

ஆசிய பசிபிக் மண்டலத்தில் முதன்மையான நிறுவனமான சிபி புட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பெனியின் மூவர் குழுவினர் 23.01.2017அன்று ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிக்கு வருகை புரிந்தனர். முதுநிலைத் துணைத் தலைவர் திரு. அப்துல்லா, பொது மேலாளர் (மனிதவளம்) திரு. டி.ஆர். நாராயணமூர்த்தி, மேலாளர் (ஆட்சேர்ப்பு) திருமதி தீப்தி ஆகியோரைக் கொண்ட குழுவினர் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டனர். கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் அவர்களது குழுமத்தில் சிறப்பாகப் பணியாற்றுவதாகவும் இந்த ஆண்டு மேலும் சில மாணவர்கள் பணியமர்த்தப்பட இருப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தனர்.

## ராகிங்கிற்கு எதிரான கண்காணிப்புக் குழு வருகை

கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார், பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் ஆகியோரைக் கொண்ட பல்கலைக்கழக அளவில் ராகிங்கிற்கு எதிரான கண்காணிப்புக் குழுவினர் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 11.01.2017அன்று வருகை புரிந்து, கல்லூரி வளாகத்தில் ராகிங்கை முற்றிலும் ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்தனர். மேலும், முன்னறிவிப்பு இன்றி விடுதி வளாகத்திற்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

## நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டத்தின் சார்பாகப் பல்கலைக்கழகம் தத்தெடுத்த கிராமமான கோவிலூர் பஞ்சாயத்தின் நெடுவாக்கோட்டையில் 31.01.2017அன்று கால்நடைச் சிறப்புச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் மொத்தம் 143 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது மற்றும் 140 கோழிகளுக்கு வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. 75 பண்ணையாளர்களுக்குத் தனுவாஸ் தாதுப்புக் கலவை வழங்கப்பட்டது. தஞ்சாவூர், இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் நிதி ஆலோசகர் திரு. ஆ. விஜயராகவன் அவர்கள் பணமில்லாப் பரிவர்த்தனை குறித்து விளக்கினார். மொத்தம் 50 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் சாலைப் பாதுகாப்பு வாரம்–2017ஐ முன்னிட்டு, காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமுன் பின்பற்ற வேண்டிய முதலுதவி நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 19.01.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். திருநெல்வேலி, ஸ்ரீசக்தி மருத்துவமனையின் முடநீக்கியல் மற்றும் காயங்கள் அறுவைச் சிகிச்சை மருத்துவர் வெங்கடேஷ் பாபு அவர்கள் விபத்தில் சிக்கி மருத்துவமனைக்கு வரக்கூடிய நபரைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளைச் செய்துகாட்டினார். இந்நிகழ்ச்சியைக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு நடத்தியது.

## பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராபின்சன் ஜெ.ஜெ. ஆப்ரகாம் அவர்கள் 31.01.2017அன்று பணி ஓய்வுபெற்றார். 11.01.1957இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மருத்துவ மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. ஜஸ்டின் வில்லியம் அவர்கள் 31.01.2017அன்று பணி ஓய்வுபெற்றார். 11.01.1957இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 28.02.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். செல்வம் அவர்கள் 31.01.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 18.01.1957இல் பிறந்த இவர், 23 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திருமதி எஸ். நேசமணி அவர்கள் 31.01.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 03.01.1959இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தின் ஒட்டுநர் திரு. எம். இசக்கி அவர்கள் 31.01.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 10.01.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையின் உடனாள்(முதுநிலை) திரு. கே. குமார் அவர்கள் 31.01.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 07.01.1957இல் பிறந்த இவர், 23 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் (முதுநிலை) திரு. கே. முனுசாமி அவர்கள் 31.01.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 08.01.1957இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## 2016ஆம் ஆண்டிற்கான சிறந்த பணியாளர் (சி மற்றும் டி பிரிவு) விருது பெற்றவர்கள்

1. திருமதி பி. சென்னியம்மாள், திறனில்லாப் பணியாளர் (முதுநிலை), முதல்வர் அலுவலகம், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஒசூர்
2. திரு. பி. செல்வராஜன், முதுநிலை ஆய்வக உதவியாளர், தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பூசிகள் பிரிவு, மாதவரம்
3. திரு. வி. விக்ரமன், திறனில்லாப் பணியாளர் (சிறப்பு நிலை), முதல்வர் அலுவலகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு
4. திரு. எஸ். முருகன், திறனறி பணியாளர் (சிறப்பு நிலை), கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி
5. திரு. ஆர். மோகனசுந்தரம், உதவியாளர், சிகிச்சையியல் இயக்குநரகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
6. திரு. எஸ். ராதா, ஆப்செட் அச்சியந்திர உதவியாளர்(முதுநிலை), பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு
7. திரு. வி. கிருஷ்ணகுமார், உதவியாளர், முதல்வர் அலுவலகம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி
8. திரு. வி. கடும்பாடி, உடனாள்(சிறப்பு நிலை), முதல்வர் அலுவலகம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி
9. திரு. டி. பாண்டியன், உதவியாளர், நிதி அலுவலகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
10. திரு. கே. நடராஜன், உடனாள், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்
11. திரு. ஆர். ராஜகோபால், துப்புரவாளர்(முதுநிலை), முதல்வர் அலுவலகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்
12. திரு. ஆர். சுரைஸ், உதவியாளர், பதிவாளர் அலுவலகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
13. திருமதி ஆர். சிந்தியா, உதவியாளர், பதிவாளர் அலுவலகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
14. திரு. எஸ். கணபதி, கொத்தர் (முதுநிலை), கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகம், மாதவரம் பால்பண்ணை
15. திரு. எஸ். முருகேசன், திறனறி பணியாளர் (சிறப்பு நிலை), கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்
16. திரு. ஜி. பாஸ்டின், ஒட்டுநர் (முதுநிலை), கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர்

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்